மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, போக்குவரத்து, சாலைவசதி இன்மையாலும், கம்பித் தொடர்களைக் காடுகளின் வழியாக இழுத்துச் செல்வதற்கு இந்திய அரசின் ஒப்புதல் தேவைப்படுவதாலும், அதிலே பெரிய கால தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. அண்மையில் இது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டு, வேறு மாற்றுத் திட்டத்தின் மூலம் அமல்படுத்தலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். மலைக் காடுகளிலுள்ள சிற்றூர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க நெடுந்தூரம் கம்பித் தொடர்கள் இழுத்துச் செல்வதற்கு மாறாக அங்கேயே டீசல் செட்டை அரசாங்கமே வாங்கிவைத்து அதன் மூலம் அந்த மின் வசதியை அவர்களுக்குத் தரலாமா என்று பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, புதிதாக ஜெனரேட்டர் பொருத்தி மின் வசதி அளிக்கும் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜெனரேட்டருக்கு ஆகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா அல்லது அங்கேயுள்ள பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசே ஏற்றுக்கொள்ளும்.

மைய அரசின் அனுமதிக்காக மாநில அரசு அனுப்பியுள்ள மின் திட்டங்கள்

*குறுகிய கால வினா எண். 2—மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மைய அரசின் அனுமதிக்காக மாநில அரசு அனுப்பியுள்ள அனல், புனல் மின் திட்டங்களின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

புனல் மின் திட்டங்கள்—

1	பைக்காரா இறுதி நிலை நீர் மின் திட்டம்.	110 மெ. வா.
2	சிறுவாணி சிறிய நீர் மின் திட்டம்	3 மெ. வா.

அனல் மின் திட்டங்கள்—

1	வட சென்னை அனல் மின் திட்டம்	1050 மெ. வா.
2	மேட்டூர் அனல் மின் திட்ட விரிவாக்கம்	420 மெ. வா.
3	தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம்	710 மெ. வா.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, இதற்கென்று ஆகும் செலவுக் கணக்கு என்ன? வெளிநாட்டினர் யாரேனும் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன்வந்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அனல் மின் திட்டங்களைப் பொறுத்த வரையில், நாம் நெய்வேலி 3-வது சுரங்கத்திற்கும் சேர்த்து அனல் மின் திட்டத்திற்காகும் செலவைக் கணக்கிடுகிறபோது, நமக்கு 2298 கோடி ரூபாய் செலவாகும். ஆகவே, இந்தத் திட்டத்திலேயே அதற்கான பணிகளை ஆரம்பித்தால்தான் வருகின்ற 7–வது ஐந்தாண்டுத் திட்டத்திலே இடம்பெறுகிற பலன், நமக்குக் கிடைக்கும். ஆனால் கிட்டத்தட்ட 2300 கோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசே நிதி ஒதுக்கம் செய்து செலவிடுவது என்பது கடினம். இது குறித்து இந்திய அரசோடு பேசும்போது வெளிநாட்டுக் கடன் அல்லது வெளிநாட்டு உதவி அளித்து இந்த நிதிஉதவியைப் பெற்று நமக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசு பல்வேறு மாநிலங்களிலே இதைப்போல வெளிநாட்டு உதவியோடுகூடிய மின்சார உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது, மேலும் நிறைவேற்ற இருக்கிறது. அதைப் போன்று வட சென்னை அனல் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்ற வெளி நாட்டு உதவி வேண்டுமென்று மத்திய அரசில் இருக்கிற மின்சார அமைச்சரைப் பார்த்துச் சொல்லியிருக்கிறோம்; நிதி அமைச்சரையும் பார்த்து சொல்லியிருக்கிறோம்.

திரு. ஆர். மணிமாறன்: தலைவரவர்களே, கோவை மாவட்டம் தொழிற்சாலைகள் நிறைந்திருக்கிற பகுதி, ஆகவே, கோவையில் இதைப்போன்று அனல் மின்சாரத் திட்டம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? அப்படிப்பட்ட உத்தேசம் இருக்கிறதென்றால், அனுமதிக்காக எவ்வளவு நாள் அரசு காத்துக்கொண்டிருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கோவையில் இத்தகைய ஒரு திட்டத்தை ஆரம்பிக்கின்ற உத்தேசம் எதுவும் தற்போது இல்லை. ஆனால் இராமகுண்டம் அனல் மின்சாரத் திட்டத்திலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தின் பங்கு பெங்களூருக்கு வந்து, அந்தப் பகுதியிலிருந்து சேலம், உடுமலைப்பேட்டைப் பகுதிக்கு வர வாய்ப்பு இருக்கிறது. அது ஒரு அனல் மின்சாரத் திட்டம்தான்.

TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 8]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, எவ்வளவு ரூபாய்க்கு மேலுள்ள திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதிபெறவேண்டியிருக்கிறது? அந்தத் தொகை எந்த நிதி ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது? அதை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் வரையிலுள்ள திட்டத்தை மாநில அரசே செய்யலாம்; அதாவது மாநில அரசின் மின்சார வாரியம் செய்யலாம். அதற்கு மேலுள்ள ரூபாய் பெறுமானத்திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. 1948-ல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் போது இந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டதாக எனக்கு நினைவு இருக்கிறது. மின்சார அமைச்சர்கள் மாநாட்டிலேகூட நாங்கள் குறிப்பிடும்போது 10 கோடி ரூபாய் அளவு வரையிலான திட்டங்களை மாநில அரசே அனுமதிக்கக்கூடிய அதிகாரத்தைத் தரவேண்டுமென்று அங்கே வற்புறுத்தியிருக்கிறோம். அந்த அதிகாரத்தை எல்லா மாநில அரசுகளுக்கும் கொடுத்தால் சிறு சிறு மின்சாரம் திட்டங்கள்-மைக்ரோ ஹைடல் பவர் திட்டங்கள்—என்று சொல்கிறார்களே, அந்தத் திட்டங்களை மாநில அரசு திட்டமிட்டுச் செய்ய வசதியாக இருக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கனவே நெய்வேலியிலே மின்சார நிலையம் அமைக்க அனுமதி கோரியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அந்த அனுமதியைக் கேட்கும் அதே நேரத்தில் நெய்வேலி சுரங்கத்தை வெட்ட மாநில அரசுக்கு எந்தவிதமான ராயல்டியும் கொடுக்கவில்லை. அந்த ராயல்டி மூலமாக தமிழக அரசுக்கு ஒரு கணிசமான தொகை கிடைக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே, மைய அரசு மாநில அரசுக்கு அந்த ராயல்டி கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நெய்வேலி திட்டம் வந்தால் போதும் என்றுகருதிக் கொண்டிருந்த மாநில அரசு மைய அரசிடம் ராயல்டி கேட்கவில்லை. அதற்கான நிலத்தைக் கூட எந்த அளவுக்கு குறைந்த மதிப்பில் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைத்து அந்த நேரத்தில் கொடுத்தார்கள். அவர்கள் எடுக்கிற லாபத்திலும் நாம் பங்கு கேட்கவில்லை. இப்போது நமக்கு வேண்டியதெல்லாம் அங்கே உற்பத்தியாகக்கூடிய மின்சாரம் முழுவதையும் கொடுத்தால் போதும்; ராயல்டி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

* வினா எண். 174— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிதாக நடப்பட்டுள்ள மரங்கள் எத்தனை?